தினமலர்

**உலக காபி ஏற்றுமதி 9 சதவீதம் உயர்வு**

ஆகஸ்ட் 13,2011,03:11



புதுடில்லி:சர்வதேச அளவிலான காபி ஏற்றுமதி, சென்ற ஜூன் மாதத்தில், 9 சதவீதம் அதிகரித்து 88 லட்சம் மூட் டைகளாக (ஒருமூட்டை = 60 கிலோ)அதிகரித்துள்ளது. இந்த ஏற்றுமதி, கடந்தாண்டு இதே மாதத்தில், 80 லட்சம் மூட்டை களாக இருந்தது என, சர்வதேச காபி அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில், காபிக்கான தேவை அதிகரித்து வருவதே இந்த ஏற்றுமதி அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என,அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) முதல் 9 மாதங்களில், காபி ஏற்றுமதி 16 சதவீதம் உயர்ந்து, 8.1 கோடிமூட்டைகளாக அதிகரித்துள்ளது.இது,கடந்த காபி பருவத்தில், இதே ஒன்பது மாதங்களில், 7 கோடி மூட்டைகளாக குறைந்து காணப்பட்டது.2011ம் ஆண்டு, ஜூன் மாதத்துடன் முடிவடைந்த 12 மாதங்களில், அராபிகா வகை காபிஏற்றுமதி, 6.84 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது.இது, கடந்த ஆண்டு, இதே மாதங்களில், 5.96 கோடி மூட்டைகளாக இருந்தது.இதே காலத்தில், ரோபஸ்ட்டா வகை காபி ஏற்றுமதி 3.26 கோடி மூட்டைகளிலிருந்து, 3.65 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது.நடப்பு 2010-11ம் ஆண்டு, காபி பருவத்தில், சர்வதேச அள வில், காபி உற்பத்தி 13.30 கோடி மூட்டைகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.அமெரிக்க வேளாண் அமைச்சகம்,சர்வதேச அளவி லான காபி உற்பத்தி 13 கோடி மூட்டைகளாக இருக்கும் என, முன்பு மதிப்பீடு செய்திருந்தது.இது, தற்போது 13.50 கோடி மூட்டைகளாக இருக்கும் என, மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி முறை அறிந்துகொள்ள குழு அமைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,00:27 IST

பள்ளிபாளையம்: "திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில், தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டுள்ளது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி

இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:பள்ளிபாளையம் பகுதியில், 11 வருவாய் கிராமங்களில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்றும் வகையில், விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையில் உள்ள, 12 அம்ச தொழில் நுட்பங்களை, விவசாயிகளுக்கு விளக்கமாக தெரிவிக்கும் வகையில், பள்ளிபாளையத்தில் தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக வேளாண் அலுவலர் கவிதா, செயலாளராக துணை வேளாண் அலுவலர் ஞானபிரகாசம் ஆகியோர் செயல்படுவர். அதன் இடுபொருள் குழுவினராக உதவி விதை அலுவலர்கள் அருள், ராஜா ஆகியோர் செயல்படுவர். செயல் விளக்க குழுவில் உதவி வேளாண் அலுவலர்கள் தமிழ்செல்வி, மாயா ஜோதி, குமார், குழந்தைசாமி, பாலமுருகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.கம்ப்யூட்டர் மூலம் இணைய தளத்தில் திருந்திய நெல் சாகுபடி முறைகளை, பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில், விவசாயிகளுக்கு நேரடியாக விளக்கமளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, திருந்திய நெல் சாகுபடி முறைகளை அறிந்திட தொழில் நுட்ப குழுவை அணுகி பயன்பெறலாம்இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நெற்பயிரில் தண்டுப்புழு தாக்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,00:06 IST

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் உள்ள நெல் வயல்களில், தண்டுப்புழு தாக்கியதால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்குட்பட்ட கோபி மற்றும் டி.என்.பாளையம் யூனியனில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்து. நெற்கதிர்களை தண்டுப்புழு தாக்கியதால், நெல் வயலில் ஒரு பகுதியில் பச்சை நிறமாகவும், மறு பகுதியில் வெளிர் நிறமாகவும் காட்சி தருகிறது. அறுவடைக்கு தயாராகி வரும் நிலையில், தண்டுப்புழு தாக்குதலில் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:கூலியாட்கள் பற்றாக்குறை, விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு சிரமங்களுக்கு இடையே நெல் நடவு செய்தோம். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தற்போது நெல் வளர்ந்து அறுவடைக்கு தயாராகி வருகிறது. நெற்பயிரில் தண்டுப்புழு தாக்குதலால் வயல்கள் வெளிர் நிறமாக மாறி

விட்டன. நெல் மகசூல் குறைந்து விட்டது.இவ்வாறு அவர்கள் கூறினர்.வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறுகையில், ""தண்டு புழு தாக்குதலை ஒரு மாதத்துக்கு முன் கவனித்து, சரியான மருந்து தெளித்திருந்தால் இவற்றை கட்டுப்படுத்தி இருக்கலாம்," என்றார்.

**மொடச்சூர் சந்தைக்கு மாடு வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,00:05 IST

கோபிசெட்டிபாளையம்: அந்தியூர் குருநாத ஸ்வாமி கோவில் மாட்டு சந்தையால், கோபி மொடச்சூர் மாட்டு சந்தைக்கு மாடு வரத்து குறைந்தது.கோபி அருகே மொடச்சூரில் வாரந்தோறும் மாடு மற்றும் ஆட்டு சந்தை நடக்கிறது. சிறுவலூர், நம்பியூர், கடத்தூர், சத்தி, திங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாடு, ஆடுகள் அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. மாட்டு சந்தையில் ஜெர்ஸி, கொங்கன் இன மாடு, எருமை மாடு, கலப்பின மாடுகள், காலேஜ் இன பசு மாடுகள் விற்பனை செய்யப்படுகிறது.
ஜெர்ஸி இன மாடுகள் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையும், கன்று குட்டிகள் 3,500 முதல் 8,000 ரூபாய் வரையும், கலப்பின பசுமாடுகள் 15 ஆயிரம் முதல் 22 ஆயிரம் ரூபாய் வரையும், கன்று குட்டிகள் 5,000 முதல் 8,000 ரூபாய் வரையும் விற்கப்பட்டது.

கொங்கன் இன பசுக்கள் 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் ரூபாய் வரையும், கன்று குட்டிகள் 4,000 முதல் 8,000 ரூபாய் வரை, இறைச்சி மாடுகள் 5,000 முதல் 7,000 ரூபாய் வரை விற்கப்பட்டது.ஆடுகள் 1,500 முதல் 2,500 ரூபாய் வரையும், இரண்டு குட்டியுடன் கூடிய ஆடுகள் 3,000 முதல் 4,000 ரூபாய், குறுப்பின ஆடுகள் 1,500 முதல் 2,000 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.மாடு விற்பனையாளர்கள் கூறியதாவது:அந்தியூர் குருநாத ஸ்வாமி கோவிலில் மாடு, குதிரை சந்தை நடக்கிறது. பல்வேறு பகுதியில் இருந்து குருநாத ஸ்வாமி கோவில் சந்தைக்கு மாடுகள் கொண்டு செல்லப்படுகிறது. மொடச்சூர் சந்தைக்கு மாடுகள் வரத்து குறைந்து விட்டது. சென்ற சில வாரங்களுக்கு முன் மாட்டு சந்தைக்கு 600 மாடுகள் வரை வரத்தானது. நடப்பு வாரம் 300க்கும் குறைவான மாடுகளே வரத்தானது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பட்டுச்செடி வளர்த்தால் விமானத்தில் சிட்டாய் பறக்கலாம்!பழங்குடியினருக்கு கலெக்டர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,22:50 IST

மேட்டுப்பாளையம் : ""பட்டுச்செடி வளர்த்தால், சிட்டாய் விமானத்தில் பறக்கலாம்," என, மாவட்ட கலெக்டர் கருணாகரன் பேசினார். பில்லூர் அணை அருகே அத்திக்கடவு பகுதியில் மாவட்ட வருவாய்த்துறையும், வனத்துறையும் இணைந்து மலைவாழ் மக்களுக்கு ஜாதிச் சான்று வழங்கும் விழாவை நடத்தின. விழாவிற்கு தலைமை வகித்து, கலெக்டர் கருணாகரன் பேசியதாவது: ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களின் பொருளாதார வளர்ச்சி மேன்மை அடையவும் அரசு பல திட்டங்களை அறிவித்துள்ளன.

ஆனாலும், இந்த உதவித்தொகையும், பல்வேறு சலுகைகளும் எல்லா மக்களுக்கும் சமமாகப் போய்ச் சேர்வதில்லை. அவை சீராக வழங்க உள்ளாட்சி நிர்வாகத்துக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதியில் வாழும் மக்கள் நம்மால் என்ன செய்ய முடியும் என்று இருக்கக் கூடாது. நீங்கள் பட்டுச்செடியை வளர்த்தால், ஏராளமான வருவாய் கிடைக்கும்; அதன்பின், சிட்டு போல் விமானத்தில் பறக்கலாம். பட்டுச் செடியை யானைகள் மற்றும் வன விலங்குகள் சாப்பிடாது. ஒரு ஏக்கரில் பயிர் செய்தால் மாதம் 10 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும். எனவே, பட்டுச் செடியை வளர்க்க பழங்குடியினர் முன் வரவேண்டும். உங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பது அதிமுக்கியம். நீங்கள் ஜாதிச்சான்று வாங்க வரும்போது, உண்மையான விபரங்களைத் தெரிவிக்க வேண்டும். பழங்குடியினர்க்கு உதவுவதற்கு உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு, கீழுள்ள அதிகாரிகள் காத்திருக்க வேண்டியதில்லை.

இத்தகைய நிகழ்ச்சிகளில், அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அருமைதாஸ், கோவை ஆர்.டி.ஒ., சாந்தகுமார், வெள்ளியங்காடு ஊராட்சி தலைவர் ஜீவானந்தம் ஆகியோர் பேசினர். தோலம்பாளையம், வெள்ளியங்காடு, கெம்மாரம்பாளையம், நெல்லித்துறை ஆகிய 4 ஊராட்சிகளை சேர்ந்த 54 மலைவாழ் மக்களுக்கு ஜாதிச் சான்றுகள் வழங்கப்பட்டன.

ரேஷன் கார்டு, ஜாதிச் சான்று, வீட்டு மனை பட்டா, ரோடு வசதி ஆகியவை கேட்டு 176 பேர் மனுக்கள் கொடுத்தனர்.காரமடை ரேஞ்சர் தேசப்பன், சிறப்பு திட்ட ரேஞ்சர் முத்தையா, கெம்மாரம்பாளையம் ஊராட்சி தலைவர் வெள்ளிங்கிரி, நெல்லித்துறை தலைவர் சக்திவேல், கவுன்சிலர்கள் மற்றும் மலைவாழ் மக்கள், வனத்துறையினர், வருவாய்த் துறையினர் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர். மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரசு வரவேற்றார்; மேட்டுப்பாளையம் தாசில்தார் மோகனராஜன் நன்றி கூறினார்.

**தென்னை நார் கழிவுகளுக்கு கிராக்கி**

ஆகஸ்ட் 14,2011,10:04



தேனி : வேண்டாத கழிவுகளாக கருதப்பட்ட தென்னை நார் கழிவுகள் தற்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன. தேனி மாவட்டத்தில் தென்னை நார் கயிறு தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன. இவற்றில் இருந்து வெளியேறும் கழிவுகள் வேண்டாத பொருளாக கருதப்பட்டு வந்தது. தொழிற்சாலை நிர்வாகத்தினர் மொத்தமாக கொட்டி தீ வைத்து வந்தனர். தற்போது இக்கழிவுகள் அரபு நாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதியாகின்றன. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது: தென்னை உரிமட்டையில் இருந்து தயாராகும் மஞ்சு (தும்பு) தனது எடையை விட ஆறு மடங்கு அதிக தண்ணீரை தன்னுள் ஈர்த்துக் கொள்ளும். எனவே தண்ணீர் பற்றாக்குறை உள்ள அரபு நாடுகளில் மரங்களை சுற்றி இந்த தென்னை மஞ்சுவை கொட்டி நீர் பாய்ச்சுகின்றனர். நீரை குடித்துக் கொள்ளும் மஞ்சு பலநாள் ஈர நிலையில் இருக்கும். இதனால் மரங்கள் வேர்கள் மூலம் மஞ்சுவிடம் இருந்து தண்ணீரை உறிஞ்சிக் கொள்கின்றன. புதிய தொழில்நுட்பம் அரபு நாடுகளின் அதிகளவில் கடைபிடிக்கப்படுகிறது. எனவே தேனி மாவட்டத்தில் இருந்து தென்னை நார் கழிவுகள் அதிகம் ஏற்றுமதியாகின்றன,'என்றார்.

**கால்நடை திட்ட பராமரிப்பு முகாம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,22:31 IST

உடுமலை : உடுமலை அருகே பள்ளபாளையத்தில், கால்நடை பராமரிப்பு திட்ட முகாமை ஊரக தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு துவக்கி வைத்தார். கால்நடை பராமரிப்பு துறை சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் இந்தாண்டு கிராமப்பகுதிகளில் 130 சிறப்பு முகாம்கள் நடந்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முதல் முகாமை பள்ளபாளையத்தில் ஊரக தொழில் துறை அமைச்சர் சண்முகவேலு துவக்கி வைத்தார். அவர் பேசும் போது, "முதல்வர் அறிவித்துள்ள இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டத்தால் கிராம பொருளாதாரம் மேம்படும். கால்நடைகளை பராமரிக்க கால்நடை கிளை நிலையங்களில் போதுமான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். நடமாடும் மருத்துவ குழு உட்பட பல்வேறு திட்டங்களை மாநிலத்தில் பால் உற்பத்தியை பெருக்குவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களால் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள

மக்கள் மிகுந்த பயனடைவர்', என்றார். பொள்ளாச்சி எம்.பி.,சுகுமார் முன்னிலை வகித்தார். கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் முத்துகோபால் வரவேற்றார். முகாமில், 1,333 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 320 மாடு மற்றும் 100 ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 30 மாடுகளுக்கு செயற்கை முறை சினையூட்டல் உட்பட பல்வேறு சிகிச்சைகளை மருத்துவ குழுவினர் மேற்கொண்டனர். நன்றாக பராமரிக்கப்படும் 10 கிடாரி கன்றுகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தக டாக்டர் சாயிராபானு, கால்நடை ஆய்வாளர்கள் பெரியசாமி, அப்துல்கலாம், உதவியாளர்கள் பாலு, பழனிச்சாமி ஆகியோர் கொண்ட குழுவினர் செய்திருந்தனர்.

**ஆர்வத்துடன் தோட்டங்களில் பணியாற்றினால் அதிக லாபம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,22:15 IST

பந்தலூர் : "கிரீன் டீ தயாரிக்க பழங்குடியின விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலை கிலோவிற்கு 27 ரூபாய் வழங்கப்படும்,' என தெரிவிக்கப்பட்டுள்ளது. பந்தலூர் அருகே ஏலமன்னா சி.டி.ஆர்.டி., நிறுவனம்; சென்னை கேர் இந்தியா நிறுவனம் இணைந்து பழங்குடியின சிறு விவசாயிகளுக்கான பொருளாதார காப்பீட்டு திட்ட துவக்க விழாவை நடத்தின. விழாவில், கத்தாப் வரவேற்றார். சி.டி.ஆர்.டி. செயல் இயக்குனர் ரங்கநாதன் பேசுகையில்,""பழங்குடியினரிடம் இருந்த 350 ஏக்கர் நிலங்கள் வேறு நபர்களின் கையில் சிக்கியுள்ளது. துவக்கத்தில் 1 லட்சம் தேயிலை நாற்றுக்கள் தேயிலை வாரியம் மூலம் பெற்று விவசாயம் நடந்தது. அதனை வரும் 3 ஆண்டுகளில் மேலும் ஊக்கப்படுத்தி பொருளாதார ரீதியாக மேம்படுத்த திட்டம் செயல்படுத்தப்படும்," என்றார்.

மரப்பாலம் உட்பிரிட்ஜ் தேயிலை தொழிற்சாலை பொது மேலாளர் ஈஸ்வரன் பேசுகையில்,""பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை வழங்கும் வகையில் கிரீன் டீ உற்பத்தி 8 மாதமாக மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பசுந்தேயிலை 16 விவசாய குழுக்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் விலையாக வழங்கப்படுகிறது. சி.டி.ஆர்.டி.,நிறுவனம் மூலம் பழங்குடியின விவசாயிகள் பசுந்தேயிலை வழங்கினால் அவர்களுக்கு மட்டும் கிலோ பசுந்தேயிலைக்கு 27 ரூபாய் வழங்கப்படும்,'' என்றார். தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில், ""பழங்குடியினர் மத்தியில் கல்வி வளர்ச்சி ஏற்படுத்தினால் மட்டுமே திட்டங்கள்முழுமையடையும்.

சிறுவிவசாயிகள் தங்களது தோட்டங்களில் வேலை செய்ய ஆர்வம் இல்லாத காரணத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.தேயிலை தொழிலை சிறப்பாக செயல்படுத்திட விவசாயிகள் முன்வந்தால் தேயிலை வாரியம் மூலம் அனைத்து பயன்களும் நேரடியாக வழங்கப்படும்," என்றார். "கேர் இந்தியா' திட்ட இயக்குனர் தேவபிரகாஷ், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் அருள்செல்வன் ஆகியோர் பேசினர். நாவா செயலாளர் ஆல்வாஸ், உபாசி ஒருங்கிணைப்பாளர் குமாரவடிவேலு, வேளாண் பொறியியல் துறை உதவி மண் வளப்பாதுகாப்பு அலுவலர் சுந்தரலிங்கம் உட்பட பலர் பங்கேற்றனர். விஜயராஜு நன்றி கூறினார்.

**தேயிலை ஏல மைய விற்பனையில் தொடரும் விலை சரிவு**

ஆகஸ்ட் 14,2011,09:37




குன்னூர் : குன்னூரில் உள்ள தமிழக அரசின் 'டீ சர்வ்' ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை தூளின் விலை, இந்தியாவில் உள்ள பிற ஏல மையங்களை ஒப்பிடுகையில் கடைசி நிலையில் உள்ளதால், அரசின், 'ஊட்டி டீ' விற்பனையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நீலகிரி சிறு தேயிலை விவசாயிகளின் நலன் காக்கவும், அவர்கள் சாகுபடி செய்து, தொழிற்சாலைகளுக்கு வழங்கும் பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கவும், கடந்த 1960ல், நீலகிரியில், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை (இன்ட்கோ சர்வ்) மாநில அரசு ஏற்படுத்தியது; தற்போது, நீலகிரியில் உள்ள 15 'இன்ட்கோ' தேயிலை தொழிற்சாலைகளில், அந்தந்தப் பகுதியில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாகி, தங்கள் தோட்டங்களில் விளையும் பசுந்தேயிலையை, தேயிலை உற்பத்திக்கு வழங்கி வருகின்றனர்.

நிர்வாக சீர்கேடு, நவீனமயமாகாத தொழிற்சாலைகள், சர்வதேச சந்தையில் போட்டியிட்டு தேயிலை தூளை விற்க முடியாத நிலை உட்பட காரணங்களால், 'இன்ட்கோ' நிறுவனம் நலிவடைய துவங்கியது. 'இன்ட்கோ' தேயிலை தூளுக்கு சந்தை வசதியை ஏற்படுத்த, 2001ல், அப்போதைய அ.தி.மு.க., அரசு, 'டீ சர்வ்' என்ற பெயரில் எலக்ட்ரானிக் ஏல மையம் அமைத்தது. குன்னூரில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் தனியார் தேயிலை வர்த்தக சங்க ஏல மையத்துக்கு இணையாக, ஏல மையத்தை

செயல்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டன. தனியார் ஏல மையத்தை சார்ந்திருந்த 'இன்ட்கோ' தொழிற்சாலைகள், 'டீ சர்வ்' மூலம் தேயிலையை விற்று, விற்கப்படும் விலை அடிப்படையில், விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு விலை வழங்கி வருகின்றன.

கடந்த 2001ல், 'ஊட்டி டீ' என்ற பெயரில் 'இன்ட்கோ சர்வ்' மூலம் தேயிலை தூள் தயாரிக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள ரேஷன் கடைகளில் விற்கப்படுகிறது. இருப்பினும், 'இன்ட்கோ' விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால், மாநில அரசு, உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கிலோவுக்கு 2 ரூபாய் மானியம் வழங்கி வருகிறது. இந்தியாவில் உள்ள ஆறு தேயிலை ஏல மையங்களை ஒப்பிடுகையில், குன்னூர் 'டீ சர்வ்' ஏல மையத்தில் தான், தேயிலை தூளுக்கு குறைந்த விலை கிடைத்துள்ளது. கடந்தாண்டு (2010) குன்னூர் தனியார் ஏல மையத்தில் 1.74 கோடி கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 66 ரூபாய், அரசின் 'டீ சர்வ்' ஏல மையத்தில் 51 லட்சம் கிலோ தேயிலை விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 63 ரூபாய் பெறப்பட்டது.

இந்தாண்டு ஜனவரி - மே வரை, குன்னூர் தேயிலை வர்த்தக சங்க ஏல மையத்தில், 1.78 கோடி கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 68 ரூபாய் பெறப்பட்டுள்ளது. அரசின் 'டீ சர்வ்' ஏல மையத்தில் 61 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 61 ரூபாய் பெறப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பிற ஏல மையங்களான கொல்கத்தா மையத்தில், சராசரி விலை கிலோவுக்கு 114.88 ரூபாய், கவுகாத்தி மையத்தில் 100.76, சிலிகுரி மையத்தில் 99.57, கொச்சின் மையத்தில் 81.47, கோவை மையத்தில் 69.95 ரூபாய் விலை கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், அரசு ஏல மையத்தில் தான், மிகக் குறைந்த விலை தேயிலை தூளுக்கு கிடைத்துள்ளது. சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறுகையில், "இன்ட்கோ நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் 'ஊட்டி டீ'யை ரேஷன் கடைகளில் விற்பதன் மூலம் ஏழை, எளிய மக்கள் மட்டுமே வாங்குகின்றனர்; விலையும் குறைவாக உள்ளது.'ஊட்டி டீ'யின் குணநலன்களை பிரபலப்படுத்தி, பெரிய வணிக நிறுவனங்களில் விற்பதன் மூலம், பணக்கார வர்க்கத்தினரும் நீலகிரி தேயிலையை வாங்கும் சூழ்நிலை உருவாகும்; தேயிலை தூளின் விற்பனை அதிகரிக்கும். ராணுவ தேவைக்கு 'ஊட்டி டீ'யை கொள்முதல் செய்தால், உற்பத்தி பன்மடங்கு உயரும். மார்க்கெட்டிங் யுக்தியை மேம்படுத்தினால் மட்டுமே 'இன்ட்கோ' நிறுவனத்துக்கு லாபம் கிடைக்கும்," என்றார்.

'இன்ட்கோ' நிறுவன முன்னாள் தலைவர் ரங்கையா கூறுகையில், "இன்ட்கோ நிறுவன நிர்வாக மேலாளராக நியமிக்கப்படும் ஐ.ஏ.எஸ்., அதிகாரி, தேயிலை தொழில் மீது ஆர்வமுள்ளவராகவும், நல்ல திட்டங்களை செயல்படுத்தி உற்பத்தி, விற்பனையை ஊக்குவிக்கும் ஆற்றல் பெற்றவராகவும் இருக்க வேண்டும். 'இன்ட்கோ' தொழிற்சாலைகளில் நிர்வாக பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள்,

அலுவலர்கள் பிற துறைகளில் இருந்து பணி மாறுதல் பெற்று வருகின்றனர்; உரிய பயிற்சி, அனுபவம் இல்லாததால், தேயிலை தொழிலை மேம்படுத்த அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. நிர்வாக ரீதியாக உள்ள குறைகளை களைந்தால் மட்டுமே 'இன்ட்கோ' நிறுவனம் தலைநிமிரும்," என்றார்.

**கடந்த ஜூலை மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 14 சதவீதம் உயர்வு**

ஆகஸ்ட் 14,2011,03:56



புதுடில்லி:நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, சென்ற ஜூலை மாதத்தில், 14 சதவீதம் அதிகரித்து, 9 லட்சத்து 13 ஆயிரத்து 179 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே மாதத்தில், 8 லட்சத்து 644 டன்னாக இருந்தது என இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.இருப்பினும், நடப்பு எண்ணெய் பருவத்தின் (நவம்பர் -அக்டோபர்) முதல் ஒன்பது மாதங்களில், தாவர எண்ணெய் இறக்குமதி 5 சதவீதம் சரிவடைந்து, 60 லட்சத்து 43 ஆயிரத்து 403 டன்னாக உள்ளது. இது, கடந்த எண்ணெய் பருவத்தின் இதே ஒன்பது மாதத்தில், 63 லட்சத்து 82 ஆயிரத்து 314 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.நடப்பு எண்ணெய் பருவத்தில், வரும் மாதங்களில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, மிகவும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.நாட்டின் துறைமுகங்களில், ஆகஸ்ட் 1ம் தேதி நிலவரப்படி, சமையல் எண்ணெய் இருப்பு, 5 லட்சத்து 60 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.சென்ற 2010-11ம் ஆண்டு பயிர் பருவத்தில் (ஜூலை - ஜூன்), இந்தியாவின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.11 கோடி டன்னாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

**ரப்பர் உற்பத்தி 7ச தவீதம் வளர்ச்சி**

ஆகஸ்ட் 14,2011,03:50



கொச்சி:நாட்டின் ரப்பர் உற்பத்தி, செ ன்ற ஜூலை மாதத்தில் 62 ஆயிரத்து 700 டன்னாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்த உற்பத்தியை விட 7ச தவீதம் (58 ஆயிரத்து 500 டன்) அதிகமாகும்.ரப்பர் அதிகளவில் உற்பத்தியாகும் பகுதிகளில் சிறந்த பருவநிலை நிலவி வருவதால் உற்பத்தி அதிகரித்துள்ளது.மேலும் இதன் விலை உயர்ந்ததால் ரப்பர் விவசாயிகள் அதிகளவில் ரப்பர் உற்பத்தியைமேற்கொண்டனர். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில் ரப்பர் உற்பத்தி 2 லட்ச த்து 38 ஆயிரத்து 400 டன்னாக அதிகரித்துள்ளது என தற்காலிக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் 2 லட்ச த்து 25 ஆயிரத்து 250 டன்னாக இருந்தது.இதே காலத்தில் ரப்பர் பயன்பாடு, 3 லட்ச த்து 9 ஆயிரத்து 50 டன்னிலிருந்து, 3 லட்ச த்து 23 ஆயிரத்து 875 டன்னாக அதிகரித்துள்ளது.செ ன்ற ஜூலை மாதத்தில் ரப்பர் பயன்பாடும் 7.6ச தவீதம் அதிகரித்து 82 ஆயிரம் டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இதே மாதத்தில் ரப்பர் இறக்குமதி 20 ஆயிரத்து 127 டன்னாக இருந்தது. என வே தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு ரப்பர் உள்ளது என ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.செ ன்ற ஜூலை மாத நிலவரப்படி கையிருப்பில் 2 லட்ச த்து 47 ஆயிரத்து 490 டன் ரப்பர் உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே மாதத்தில் 1 லட்ச த்து 80 ஆயிரத்து 958 டன்னாக இருந்தது.

**காபி விவசாய இயந்திரங்கள் 50 சதவீத மானியம் நிச்சயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,01:35 IST

கூடலூர் : "காபி விவசாய பணிகளுக்கான இயந்திரங்கள் வாங்க 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும்,' என கூடலூர் காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.கூடலூர் காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர் நிர்மல் டேவிஸ் வெளியிட்டுள்ள அறிக்கை:காபி தோட்டங்களில் வேலை செய்யும் ஆட்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, 11வது ஐந்தாண்டு திட்டத்தில் காபி தோட்டங்களில் இயந்திர

மயமாக்குதலுக்கான உதவி திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் கூடலூர், பந்தலூர் பகுதி பட்டா மற்றும் காபி பதிவு சான்று உரிமம் பெற்ற காபி விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மூலம் குழிதோண்டும் இயந்திரம்; களை எடுக்கும் இயந்திரம்; நிழல் கலைப்பு கருவி; பேட்டரி மூலம் இயக்கும் பழம் பறிக்கும் இயந்திரம் உட்பட பல வற்றுக்கு மானியம் அளிக்கப்படுகிறது. 20 எக்டர் வரையுள்ள காபி விவசாயிகளுக்கு 50 சதவீதமும், அதற்கு மேல் உள்ளவர்களுக்கு 25 சதவீதமும், சுய உதவி குழுக்கள், சிறு விவசாய குழுக்களுக்கு 50 சதவீதமும் மானியம் வழங்கப்படும். மானியம் பெறுவதற்கான தகுதி, விதிமுறைகள் குறித்த விபரங்களை கூடலூர் கோழிபாலம் காபி வாரிய அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.

**ஏமாற்றியது உருளைக்கிழங்கு : விரக்தியில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,22:20 IST

கொடைக்கானல் : கொடைக்கானலில் பருவமழை பொய்த்த தால், உருளைக்கிழங்கு உற்பத்தியில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் மாற்று தொழிலுக்கு மாறும் நிலை ஏற்படும் என, விவசாயிகள் கவலையில் உள்ளனர். மேல்மலை கிராமங் களான பூம்பாறை, மன்னவனூர், பூண்டி கிராமங்களில் 1000 எக்டேரில் உருளைக்கிழங்கு விவசாயம் செய்யப்படுகிறது. குறைந்த முதலீடு, பயிரிட்ட 90 நாளில் மகசூல் என்பதால் விவசாயிகளிடம் ஆர்வம் அதிகம். இவை வட மாநிலங்களுக்கு செல்கின்றன. இந்நிலையில், நடவு செய்யப்பட்ட போது எதிர்பார்த்த மழை இல்லாததால், ஒரு ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே விளைந்துள்ளன. போதிய விலையும் இல்லாததால் செலவிட்ட தொகையில் பாதி கூட கிடைக்காமல், விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.
குறிஞ்சிநகர் விவசாயி பரமசிவம் கூறுகையில், ""பயிரிட்ட 30 நாளில் இருந்து 60 நாட்கள் வரை மழை இருந்தால் மட்டுமே நல்ல விளைச்சல் இருக்கும். இந்த ஆண்டு எதிர்பார்த்த மழை இல்லை. தற்போது ஒரு சிப்பம் (45 கிலோ) 600 ரூபாய்க்கு மட்டுமே விலை போகிறது. ஆயிரத்திற்கு மேல் விலை கிடைத்தால் மட்டுமே லாபம்,'' என்றார்.

**தேனி, திண்டுக்கல், நாமக்கல் கரும்பு விளைச்சலில் சாதனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,01:13 IST

தேனி : தேனி, திண்டுக்கல், நாமக்கல் மாவட்டங்கள் மாநில சராசரியை விட, அதிகளவில் கரும்பு விளைவித்து சாதனை படைத்து உள்ளன.

மாநிலத்தில் 3 லட்சத்து 20 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் கரும்பு விளைகிறது. 2011-2012 ம் ஆண்டு 3 லட்சத்து 50 ஆயிரம் எக்டேரில் கரும்பு சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கரும்பு உற்பத்தி திறன் எக்டேருக்கு 67 டன். தமிழகத்தின் சராசரி எக்டேருக்கு 105 டன். ஆனால் தேனி, திண்டுக்கல், நாமக்கல் மாவட்டத்தில் மாநிலத்தின் சராசரியை விட அதிகளவு கரும்பு விளைக்கப்படுகிறது. மண்வளம், காலநிலை, விவசாய சாகுபடி முறையே இதற்கு காரணம். தேனி மாவட்டம் முதலிடம் பெற்று, விளைச்சல் சராசரியாக எக்டேருக்கு 121.10 டன்களாக உள்ளது.

மாவட்டத்தில் 6 ஆயிரத்து 400 எக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிதாக மூன்று ரகங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவைகள் எக்டேருக்கு 155 டன் விளைச்சல் தரக்கூடியவை. புதிய ரகங்களில் சர்க்கரை கட்டுமான திறன் 13.05 சதவீதமாக உள்ளது. இந்த ரகங்கள் வெல்லம் உற்பத்திக்கும் அதிகம் பயன்படும் என, தேனியில் நடந்த கரும்பு சாகுபடி கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

**திருந்திய நெல் சாகுபடி விவசாயத்துறை விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,02:33 IST

தேனி : திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயத்துறை விளக்கம் அளித்துள்ளது.

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு நெல் ரகங்களை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 2 கிலோ விதை, ஒரு சென்ட் நாற்றங்கால் தேவை. நாற்றாங்காலில் பாலித்தீன் விரிப்புகளை விரித்து சுற்றிலும் மரச்சட்டங்களை வைத்து உள்ளே மேட்டுப்பாத்திகள் அமைத்து, மண் மற்றும் தொழு உரம் நிரப்பி விதைக்க வேண்டும்.

10 முதல் 14 நாள் நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமன் செய்ய வேண்டும். இடைவெளிக்கு மார்க்கர் கருவியை பயன்படுத்த வேண்டும். 22.5 செ.மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.
2.5 செ.மீ.,க்கு அதிகமாக நீர் பாய்ச்சக் டாது. களையெடுக்கும் கருவி மூலம் மட்டுமே களையெடுக்க வேண்டும். 10 நாளுக்கு ஒருமுறை வீதம் மொத்தம் நான்கு முறை களையெடுக்க வேண்டும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப தழைச்சத்து மேல் உரமாக இட வேண்டும். இவ்வாறு விவசாயத்துறை விளக்கம் அளித்துள்ளது.

**ஸ்ரீவி.,ல் பருத்தி விலை குறைந்ததால் மிளகாய் சாகுபடியில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,22:58 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : பருத்தி விலை குறைந்ததால் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் மிளகாய் சாகுபாடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஜனவரியில் குவிண்டாலுக்கு 6000 ரூபாயாக இருந்த பருத்தி , ஜூலையில் 2500 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால் அதிக லாபம் கிடைக்கும் என எதிர்பார்த்த விவசாயிகள் நஷ்டத்திற்குள்ளாகினர். இந்நிலையில் தற்போது ஆடிப்பட்ட விதை நடவு ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் நடந்து வருகிறது. இதில் கடந்த முறை பருத்தி நடவு செய்த பெரும்பான்மை விவசாயிகள் மிளகாய் சாகுபடிக்கு மாறி வருகின்றனர். முத்துலிங்காபுரம், பாணான்குளம், தொம்பகுளம், பாப்பயைநாயக்கன்பட்டி, நாச்சியார்பட்டி உட்பட பகுதி விவசாயிகள் மட்டும் பருத்திநடவு செய்து வருகின்றனர். விவசாயி ராஜசேகர் கூறுகையில்,"" பருத்தி விலை குறைவால், மிளகாய் சாகுபடி செய்ய முடிவு செய்து விதை நடவு செய்துள்ளேன்," என்றார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர்(பொறுப்பு) ஆழ்வார்சாமி கூறுகையில், ""கடந்தாண்டை விட இந்தாண்டு கூடுதலாக 25 ஹெக்டேர் பரப்பில் விவசாயிகள் மிளகாய் நடவு செய்துள்ளனர்," என்றார்.

**காய்கறி சாகுபடி கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2011,03:32 IST

கோவில்பட்டி : கோவில்பட்டியில் தோட்டக்கலை துறையின் சார்பில் காய்கறி சாகுபடி கருத்தரங்கம் நடந்தது.கோவில்பட்டி வட்டார தோட்டக்கலை துறையின் சார்பில் வேலாயுதபுரத்தில் காய்கறி சாகுபடி கருத்தரங்கம் நடந்தது. கோவில்பட்டி வேலாயுதபுரத்தில் நடந்த கருத்தரங்கிற்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜகுமார் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சரவணகுமார் வரவேற்றார்.

தொடர்ந்து தோட்டக்கலை அலுவலர் நாராயணசாமி கலந்து கொண்டு துறையின் சார்பில் விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் வெள்ளப்பாண்டி காய்கறி பயிர்களுக்கு விதை நேர்த்தி செய்யும் முறையை செயல்முறை விளக்கமளித்தார். இதையடுத்து தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சையது அகமது மிராஞ்சி கலந்து கொண்டு ஆடிப்பட்டம் தேடி விதைப்போம் என்ற தலைப்பில் பேசியதுடன் மானிய திட்டங்களுக்கான காசோலைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். மேலும் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி குறித்து கலந்துரையாடல் நடந்தது. அப்போது தோட்டக்கலைத்துறை மூலம் காய்கறி விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் நவீன் ராஜ் நன்றி கூறினார்